தி.மு.கழக ஆட்சியில் விளையாட்டுத் துறைக்கு அதிக முக்கியத்துவம்!

உதயநிதி ஸ்டாலினின் வலுவான அடித்தளத்தால் தமிழ்நாட்டு வீரர்கள் சர்வதேச அளவில் வெற்றி!

ஆசிய சர்வதேசப் போட்டியில் சாதனை படைத்த வீராங்கனை வித்யா ராமராஜ் பேட்டி!

சென்னை, அக். 1 -

சர்வதேச தடகளப் போட்டிகளில் இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் தொடர்ந்து நிலைநிறுத்தி வருபவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த நட்சத்திர வீராங்கனை வித்யா ராம்ராஜ். களத்தில் அடுத்தடுத்துப் பல சாதனைகளையும் பதக்கங்களையும் குவித்து வரும் இவர், தனது இந்த அபார வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பின்னால் இருந்த ஆதரவு குறித்து வெளிப்படையாகப் பேசியுள்ளார்.

குறிப்பாக, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த உதயநிதி ஸ்டாலின் கொண்டுவந்த திட்டங்களும், விளையாட்டுத் துறைக்கு அவர் அளித்த அதீத முக்கியத்துவமும்தான் தங்களைப் போன்ற வீரர்களின் வாழ்க்கையையே தலைகீழாக மாற்றியது என்று வித்யா ராம்ராஜ் நெகிழ்ச்சியுடன் பாராட்டியுள்ளார்.

"உதயநிதி சார் வந்த பிறகு எல்லாமே மாறியது":

வித்யா ராம்ராஜ் தடகளத்தில் தமிழ் நாடு எப்போதும் நல்ல நிலையில் இருந்தபோதிலும், முந்தைய தி.மு.க. ஆட்சியில் உதயநிதி ஸ்டாலின் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகே வீரர்களுக்குக் கிடைத்த ஆதரவு பல மடங்கு உயர்ந்ததாக வித்யா ராம்ராஜ் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து சமீபத்தில் அவர் பேசுகையில்: "மற்ற விளையாட்டுகளுடன் ஒப்பிடும் போது, தடகளத்தில் (Athletics) தேசிய அளவிலும், மாநிலங்களுக்கு இடையேயான போட்டிகளிலும் நாம் எப்போதுமே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறோம். ஆனால், எப்போது உதயநிதி சார்



விளையாட்டுத் துறைக்கு வந்தாரோ, அப்போதிலிருந்து விளையாட்டுத் துறைக்குக் கிடைத்த ஆதரவு மிகப் பெரிய அளவில் அதிகரித்தது. ஏனென்றால், அவர் வந்த பிறகு விளையாட்டுத் துறையில் ஒவ்வொன்றும் முன்னேறியது; எண்ணற்ற புதிய திட்டங்களைக் கொண்டு வந்தார். நான் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றபோது எனக்குப் பல லட்ச ரூபாய் ரொக்கப் பரிசுகள் கிடைத்தன; கிட்டத்தட்ட ரூ.80 லட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. அந்த அளவுக்கு அவர்கள் விளையாட்டு வீரர்களை முழு மனதோடு ஆதரித்தார்கள்" என்று தெரிவித்துள்ளார்.


எலைட் திட்டம் தந்த நிம்மதி

விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவில் போட்டியிட வேண்டும் என்றால் உயர்தர காலணிகள், சத்தான உணவு, உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் அத்தியாவசியம். எளிய பின்புலத்தில் இருந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு இது மிகப் பெரிய சுமையாக இருந்து வந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் உதயநிதி ஸ்டாலின் தீவிரப்படுத்திய 'எலைட் திட்டம்' (Elite Scheme) தங்களுக்கு எவ்வாறு கைகொடுத்தது என்பதை வித்யா ராம்ராஜ் விளக்கியுள்ளார்: ஆண்டுக்கு ரூ.30 லட்சம் உதவித் தொகை: எலைட் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட முன்னணி வீரர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.30 லட்சம் வரை அரசு சார்பில் பயிற்சி செலவுகளுக்காக வழங்கப்படுகிறது.

வித்யா ராம்ராஜ் குறிப்பிடுகையில், "இப்போது விளையாட்டுக்குத் தேவையான எந்தப் பொருளை வாங்கினாலும், அதற்கான ரசீதை (Bill) ஒரு வாரத்திற்குள் சமர்ப்பித்தால் போதும். அடுத்த 30 நாட்களுக்குள் அந்த முழுப் பணமும் எங்கள் வங்கிக் கணக்கிற்குத் திருப்பித் தரப்படுகிறது. இதனால் வீரர்களுக்குப் பணத் தட்டுப்பாடு என்ற பேச்சே இருப்பதில்லை" எனக் கூறியுள்ளார்.

பயிற்சிக்குத் தேவையான உபகரணங்களை எந்தவிதத் தயக்கமும் இன்றி வாங்க முடிகிறது என்பதும், பணப் பற்றாக்குறை குறித்த கவலைகள் ஏதுமின்றி போட்டிகளில் மட்டுமே முழு கவனத்தையும் செலுத்த முடிகிறது என்பதும் வீரர்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதம் ஆகும். "இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு திட்டம் இல்லை" தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) மூலம் செயல்படுத்தப்பட்ட இத்தகைய திட்டங்களை நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டு வித்யா ராம்ராஜ் பெருமிதம் தெரிவித்துள்ளார்: உதயநிதி சார் அந்த அளவிற்கு தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை உயர்த்தியுள்ளார். மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நமது தமிழ்நாடு மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் விளையாட்டு வீரர்களுக்கு இவ்வளவு சிறப் பான உதவிகளைச் செய்யும் திட்டங்கள் கிடையாது. வீரர்களின் திறமைகளை முன்கூட்டியே கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான நிதி, நவீன மைதானங்கள், விளையாட்டு அறிவியல் மையங்கள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளை வழங்கி உதயநிதி ஸ்டாலின் அமைத்துக் கொடுத்த அந்த வலுவான அடித்தளமே, இன்று தமிழ்நாட்டு வீரர்கள் சர்வதேச மேடைகளில் தலைநிமிர்ந்து நிற்கக் காரணமாக அமைந்துள்ளது. விளையாட்டு வீரர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவர்களுக்குத் தேவையானதை உடனுக்குடன் செய்து கொடுத்ததால்தான் தங்களால் தடைகளைத் தாண்டி சாதனை படைக்க முடிந்தது என்பதை வித்யா ராம்ராஜின் இந்த நெகிழ்ச்சியான வார்த்தைகள் மெய்ப்பித்துள்ளன.

அக்டோபரும் செவாலியரும்!



ஓராயிரம்
பாவங்களை
ஓர் முகத்தில்
காட்டிய

உலகின்
ஆகச்
சிறந்த

கலைஞனின்
அவதார
திருநாள்

அக்டோபர் -1

முகம் மட்டுமே
நடிக்கும்
நடிகர்களுக்கு
மத்தியில்

நகமும்
நடித்த
நடிகர் திலகம்

"நா" பேசும்
வசனத்தை
நடையால்
பேசிய
நாயகன்..

சங்கத்தமிழ்
பூமிக்கு
சாயங்கால
சந்தோசத்தை

நெடுங்காலம்
அள்ளித்தந்த
நிகரில்லா
நடிகன்..

கப்பலோட்டிய
தமிழனை
கண்முன்னே
நிறுத்திய
கலைஞன்..

வீரபாண்டிய
கட்டபொம்மனை
விழிமேடையில்
உலவ விட்ட

ஒப்பில்லா
கலைப்
பொக்கிஷம்..
திருவருட் செல்வரை
திரையில்
கொண்டு வந்து..

கவிபாடிக்
களித்த
பாரதிக்கும்

திரைவடிவம்
தந்த
தீந்தமிழ்
நாயகன்..

கந்தனாக
கர்ணனாக
காளிதாசனாக

காவியத்து
நாயகர்களாக
கடவுளர்
வடிவமாக

ஆணாக
பெண்ணாக
அர்த்தநாரியாக

இப்படி...

ஆயிரமாயிரம்
அவதாரங்களால்

பார் போற்றிய
நடிப்பின்
பல்கலைக்கழகம்..

செந்தமிழ்
பூமிக்கு
செவாலியே
வென்று வந்த

சிங்கத்தமிழன்
சிம்மக்
குரலோன்..

கலைவானில்
ஒளிவீசும்

காலத்தால்
அழியாத
சாஸ்வத
நட்சத்திரம்..

சினிமாவை
சாடிய
பெரியாரிடமே

சிவாஜி
பட்டம் பெற்ற

கணேசன் எனும்
கலைத்தாயின்
மூத்த மகன்...

பாசமலர்
பொழிந்து

பாரதவிலாஸ்
படைத்த

தேசியக்
கலைஞன்..

உயர்ந்த மனிதன்
உத்தம
புத்திரன் என

விழிபேசும்
அந்த
வீரத்திற்கு

இமையும்
நடிக்கும்
இமயத்திற்கு

இன்று
பிறந்தநாள்...

'சிவாஜி
செத்தது
போலவே
நடிக்கிறார்'

இப்படி
அந்த
மகா கலைஞனின்

மரண
ஊர்வலம்
பார்த்து

மழலை ஒன்று
சொன்னதாம்

ஆம்
அசலை கூட
நடிப்பென்று

ஆச்சரியம்
கொள்ள வைத்த

அந்த
அமரத்துவமிக்க
கலைஞனுக்கு
பிறந்தநாள்

வணங்குவோம்
வாழ்த்துவோம்



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்!

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பிரச்சாரம்!



தேசிய முற்போக்கு திராவிட கழக பொதுச் செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. அவர்களின் 101 - தாராபுரம் (தனி) சட்ட மன்றத் தொகுதி இடைதேர்தல் சுற்றுப்பயண விவரம் :-

நாள் : 01.10.2026 (வியாழக்கிழமை)

வ.எண்	நேரம்	ஒன்றிய / நகர / பேரூர் கழகங்கள்	இடம்
1.	மாலை 5.45	மூலனூர் கிழக்கு ஒன்றியம்	நால்ரோடு (கருப்பன்வலசு)
2.	மாலை 7.15	கொளத்துப்பாளையம் பேரூர்	கரையூர்
3.	இரவு 8.15	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	அலங்கியம்

தேர்தல் பணிக்குழு

101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மதுரை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சி தலைவர் மக்கள் க.தண்டபாணி முன்னிலையில் வீதி, வீதியாக சென்று பொது மக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் மதுரை மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், மூலனூர் பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் கிழக்கு ஒன்றியம், குமாரபாளையம் ஊராட்சி பகுதியில் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், ஒன்றிய கழக செயலாளர்கள் பி.சி.தங்கம், கே.சி.பாலு, திருப்பூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.சசிகுமார், தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ம.அசோக்குமார் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

